மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, கால அளவை நான் இப்பொழுது நிர்ணயிக்கின்ற நிலையில் இல்லை. ஆனால் விரைவிலே இதற்கு ஒரு முடிவு காண வேண்டுமென்று நான் முன்பே குறிப்பிட்டிருக்கிறேன். துறையினரும் இதிலே விரைவிலே முடிவு காண வேண்டும். பி. டி. க்கு சமமாக இருப்பவர்களைப் பொறுத்த அளவிற்கு, நாம் முடிவு எடுத்திருக்கிறோம். செகண்டரி கிரேடுக்குச் சமமாக இருக்கிறவர்களைப் பற்றித் தான் பிரச்சினை இருக்கிறது. அதிலே பல்வேறு பகுப்புக்கள் இருப்பதன் காரணமாக, ஒரு முடிவுக்கு வர வேண்டியிருக்கிறது. முடிவுக்கு வந்தவுடன் அது நடைமுறைப் படுத்தப் படும்.

*Cattle Farm in North Arcot District*

* 136 Q.—THIRU A. BALASUBRAMANIAM (on behalf of THIRU L. BALARAMAN): Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state :

(*a*) whether the Government have examined the establishment of a Cattle Farm in North Arcot District; and

(*b*) if so, the decision taken thereon?

வட ஆற்காடு மாவட்டத்தில் கால்நடைப் பண்ணை

திரு. எ. பாலசுப்பிரமணியம் (திரு எல். பலராமன் சார்பில்) : மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில், கால்நடைப் பண்ணை அரசு நிறுவ ஆராய்ந்ததா?

(இ) ஆமெனில், இது குறித்து எடுத்த முடிவு யாது ?

மாண்புமிகு திரு ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, (அ) ஆம்.

(இ) அதற்காக வேண்டி இடம் தேர்ந்தெடுக்கும்படியாக கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினக்கள்-விடைகள் முடி வுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக் குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக் கும்]